# WELCOME

# கல்லூரி ஆண்டு விழா

# 2023-2024ஆம்

# கல்வியாண்டின் ஆண்டறிக்கை

# எம்.வி.முத்தையா

# அரசு மகளிர் கலைக் கல்லூரி

## திண்டுக்கல்

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து.



**WELCOME TO OUR PRINCIPAL MADAM**
**BY**
**MVM ARTS COLLEGE (W)**

# கல்லூரி ஆண்டு விழா மற்றும் பேரவை நிறைவு விழா

" கல்வி கரையில கற்பவர் நாள்சில "

நாள் : 21.03.2024 நேரம் : காலை 10.00மணி

கடவுள் வாழ்த்து : கல்லூரி மாணவியர்

வரவேற்புரை & சிறப்புவிருந்தினர் அறிமுகம் : முனைவர் ஜெ.தனசேகரன் எம்.ஏ.,எம்.பில்.,பி.எச்.டி.,
இணைப்பேராசிரியர், வரலாற்றுத்துறை
எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக்கல்லூரி,
திண்டுக்கல்.

தலைமையுரை : முனைவர் க.நாகநந்தினி எம்.ஏ.,எம்.ஃபில்.,பி.எச்.டி.,
முதல்வர் (மு.கூ.பொ)
எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக்கல்லூரி,
திண்டுக்கல்.

ஆண்டறிக்கை வாசித்தல் : திருமதி. ல.பென்சிலா எம்.ஏ.,எம்.ஃபில்.,
துறைத்தலைவர், வரலாற்றுத்துறை
எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக்கல்லூரி, திண்டுக்கல்

சிறப்புவிருந்தினர்: முனைவர் ஜா.ஸ்.ஏஞ்சலின் எம்.எஸ்.சி.,எம்.ஃபில்.,பி.எச்டி.,
முதல்வர், அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கொடைக்கானல்.
முதல்வர், கூடுதல் பொறுப்பு, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
வேடசந்தூர்.

பரிசு வழங்குதல் : சிறப்பு விருந்தினர்

பரிசு பெற்றோரின் பெயர் பட்டியல் வாசித்தல் : முனைவர்.பா.முருகேஸ்வரி எம்.ஏ.,எம்.எட்.,எம்.ஃபில்.,பி.எச்.டி.,
இணைப்பேராசிரியர், வரலாற்றுத் துறை
எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக்கல்லூரி, திண்டுக்கல்.

நன்றியுரை : செல்வி.வே.ராகினி
வணிகவியல் மூன்றாமாண்டு
பேரவைத் தலைவி

1. ஒரு பிறப்பில் தான் கற்றக் கல்வியானது அப்பிறப்பிற்கு மட்டும் அல்லாமல் அவனுக்கு ஏழுபிறப்பிலும் உதவும் தன்மை உடையது.- என்ற திருவள்ளுவரின் வாக்கினைஉணர்ந்துதிண்டுக்கல் மாநகரில் 57 ஆண்டுகளுக்கும் மேலாக கல்வி சேவையினை வழங்கி பெண்களின் உயர் கல்விக்கென முன்னோடியாய் விளங்கும்எம்.வி. முத்தையா அரசு மகளிர்கலைக்கல்லூரியின் 2023 -24 ம் கல்விஆண்டிற்கான ஆண்டறிக்கையும் அதனோடு புகைப்படங்களுடன் கூடிய விளக்கக் காட்சியினையும் சேர்ந்து சமர்ப்பிப்பதில் பெருமிதமும்பெருமகிழ்ச்சியும் அடைகிறோம்.

திண்டுக்கலில் ஒப்பற்ற கல்லூரியாக இன்று இக்கல்லூரி திகழ அந்நாளில் 40 ஏக்கர் நிலமும் ஒரு லட்ச ரூபாய் நிதியும் அளித்த கொடை வள்ளல் அங்கு விலாஸ் குடும்பத்தினரின் தியாகத்திற்கு எதுவும் ஈடாகாது. பெண்களின் உயர்கல்விக்கு இவர்கள் போட்ட விதை இன்று விருட்சமாக வளர்ந்து செழிக்க காரணமாக இருந்த அங்கு விலாஸ்குடும்பத்தினருக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினை தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம் .

எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக் கல்லூரி 1966 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் தமிழக அரசால் பழனிசாலையில் தற்போதுள்ள அரசு மேனிலைப் பள்ளி வளாகத்தில் வரலாறு மற்றும்வேதியியல் பாடப்பிரிவுகளை மட்டுமே கொண்டு தொடங்கப்பட்டது.

1975 ஆம் ஆண்டு முதல் கல்லூரி இந்த வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. ஏழை எளிய மாணவிகளுக்கு கல்விச் செல்வத்தை கடந்த 57 வருடங்களாக வழங்கி அவர்களின் உயர்கல்விக் கனவை நினைவாக்க முதுகலை மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளும் தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

1966 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இக் கல்லூரி 2002 ஆம் கல்வி ஆண்டு வரை மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் கீழும் 2003 ஆம் கல்வி ஆண்டு முதல் கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் கீழும் செயல்பட்டு வருகிறது.

**மேலும் பல மாணவிகளின் கல்வி கனவை நனவாக்கும் வகையில் 2007 ஆம் கல்வி ஆண்டு முதல் இரண்டாம் சுழற்சி வகுப்புகள் தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.**

**எம் கல்லூரியில் முதல் சுழற்சியில் 13 இளநிலை பாடப்பிரிவுகளும், 11 முதுநிலை பாடப்பிரிவுகளும், மூன்று ஆராய்ச்சி பாடப்பிரிவுகளும் மற்றும் இரண்டாம் சுழற்சியில் ஆறு இளநிலை பாடப்பிரிவுகளும் கொண்டு முதல் தரக் கல்லூரி ஆக விளங்குகிறது.**

**தேசிய தர ஆய்வு மறு மதிப்பீட்டுக் குழுவினரால் A தரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. கல்லூரி முதல்வர் முனைவர் L. ரேவதி அவர்களின் சீரிய தலைமையில் முதல்வரோடு இணைந்து 55 பேராசிரியர்களும் 77 கௌரவ விரிவுரையாளர்களும் 14 ஆசிரியரல்லா பணியாளர்களும்பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் வாயிலாக 18 ஆசிரியர்களும் 28 ஆசிரியரல்லா பணியாளர்களும், கணினி பயிற்சி திட்டத்தில் 9 ஆசிரியர்களும் பணிபுரிந்து வருகின்றனர். இக்கல்வி ஆண்டில் மொத்தம் 3055 மாணவிகள் பயில்கின்றனர்.**

# 2.பல்கலைக்கழகத்தேர்ச்சிவிவரம்

ஏப்ரல் 2023 நடைபெற்ற பல்கலைக்கழக இறுதியாண்டு தேர்வில் இளநிலை பாடப்பிரிவு புவியியல் துறை ஆங்கில வடிவில் 99% பொருளாதாரத்தில் இரண்டாம் சுழற்சி ஆங்கில வழியில் 98 சதவீதமும் கணினி அறிவியல் துறையில் 99 சதவீதமும் கணிதத்துறையில் இரண்டாம் சுழற்சி ஆங்கில வழியில் 93 சதவீதமும் முதல் சுழற்சி தமிழ் வழியில் 97% வணிகவியல் துறையில் முதல் சுழற்சியில் 98 % பதிவுகளும் மற்றும் அனைத்து துறைகளும் 100 சதவீத மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர். முதுகலை பாடப்பிரிவில் அனைத்து துறைகளிலும் 100 சதவீதமும், PGDCA துறையிலும் 100சதவீத மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

# 3. ஆசிரியர்களின் திறன் மேம்பாட்டு பயிற்சி

## 3. a முனைவர் பட்டம் மற்றும் பயிற்சி
## கணிதத்துறை

**கணிதத்துறை கௌரவ விரிவுரையாளர்கள் திருமதி K.விஜயலட்சுமி மற்றும் திருமதி செல்வி ஆகிய இருவரும் ஆய்வு மேற்கொண்டு இருவரும் முனைவர் பட்டம் பெற்றனர்.**

## 3.b வேதியல் துறை

**திருமதி கு நந்தினி கௌரவ விரிவுரையாளர் அவர்கள் இவ்வாண்டின் முதல் பருவத்தில் 17.07.2023 இல் இருந்து 21.1.2024 வரையிலும் இரண்டாம் பருவத்தில் 22.01.2024 முதல் 30.1.2024 வரையிலும் மேலும் 29/4/2024 மற்றும் 30.01.2024 ஆகிய நாட்களில் பார்மா ஜின் மற்றும் E.V பேட்டரி பராமரிப்பு திறன் பயிற்சி பெற்றனர்.**

# 3.c ஆய்வுக்கட்டுரை

நமது கல்லூரி கல்லூரியில் நூலகர் கணினி அறிவியல் துறை வணிக நிர்வாகவியல் துறை சார்ந்த பேராசிரியர்கள் தங்களது ஆய்வு கட்டுரைகளை பல்கலைக்கழக மானிய குழுவின் பட்டியலில் இடம் பெற்றுள்ள இதழ்களிலும் Scopus, Index இதழ்களிலும் வெளியிட்டுள்ளனர் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

# 3.d Patent

கணினி அறிவியல் துறை டாக்டர் A. ஆதிசக்தி கௌரவ விரிவுரையாளர் அவர்கள் 9/11/2023 அன்று IOT and AI For Smart Automation in Industries 4.0 using sensors என்ற தலைப்பில் Patent பதிவு செய்து உள்ளார்.



A. ஆதிசக்தி கௌரவ
விரிவுரையாளர்

# 4.e, AWARD 2023-2024

**கணினி அறிவியல் துறையைச் சார்ந்த டாக்டர் ஏ. சுப்பிரமணி அவர்கள் 05.09.2023 அன்று சென்னையில் ASET JOURNAL OF MANAGEMENT நடத்திய ஆசிரியர் தின விழாவில் INTERNATIONAL DISTINGUISHED TEACHER AWARD என்ற விருதும் 17.12.2023 அன்று சென்னையில் நடைபெற்ற விழாவில் மதுரை “அறம் செய்ய விரும்பு அறக்கட்டளை” சார்பாக “நல்லாசிரியர்” விருதும் பெற்றுள்ளார்.**





**மற்றும் கணினி அறிவியல் துறையை சார்ந்த திருமதி J.சுகன்யா அவர்கள் 16.08.2023 அன்று BP Internation Research Publication certificate Excellence in peer Reviewing awarded to in recognition of outstanding contribution to the quality of the book மேலும் 12.09.2023 அன்று Journal of Advances in Microbiology and current Journal of Applied Science and Technology certificate of excellence in peer Reviewing awarded to in recognition of outstanding contribution to the quality of the journal.**



## 4. மென் திறன் மேம்பாட்டு மையம் (Soft Skills Centre)

நமது எம்.வி முத்தையா அரசு மகளிர் கலை கல்லூரியில் தமிழ்நாடு அரசின் தமிழ்நாடு உயர்கல்வி மன்றம் வழங்கிய ரூபாய் இரண்டரை லட்சம் நிதி உதவியுடன் கல்லூரியின் மென் திறன் மேம்பாட்டு மையம் மூலமாக 859 மாணவிகளுக்கு மென் திறன் மேம்பாட்டு பயிற்சி (Intensive soft silk Training) கடந்த 24.07.2023 கல் 08.08.2023 வரை 11 நாட்களுக்கு நடைபெற்றது இந்த பயிற்சியில் கல்லூரியைச் சேர்ந்த 27 பேராசிரியர்கள் பயிற்றுநர்களாக பணியாற்றி மாணவிகளுக்கு Communication Skills, Team Building, Positive Thinking, Lateral Thinking, Time Management, Presentation Skills, Stress Management and Emotional Intelligence, Interview Skills and Group Discussion and Interpersonal Skills போன்ற தலைப்புகளில் சிறப்பு பயிற்சி அளித்தனர். பயிற்சியின் இறுதியில் அனைத்து மாணவிகளுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்த சிறப்பு மென் திறன் மேம்பாட்டு பயிற்சி ஆங்கிலத்தில் வினை பேராசிரியரும் கல்லூரியின் மென் திறன் மையத்தின் பொறுப்பாளருமான முனைவர் மு. ராசாராம் அவர்கள் ஒருங்கிணைப்பில் சிறப்புற நடைபெற்றது.

## 5. REFRESHER

நமது கல்லூரியை சார்ந்த பேராசிரியர்கள் ஐந்துக்கும் மேற்பட்டோர் இந்த கல்வி ஆண்டில் புத்தாக்க பயிற்சியில் கலந்து கொண்டு தங்களது புலம்சார்ந்த பாடங்களில் புதிய அனுபவங்களை பெற்றனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

## 6. FDP Work Shop

2023-24 ஆம் கல்வியாண்டில் மட்டும் நமது கல்லூரியின் பேராசிரியர்கள் பத்துக்கும் மேற்பட்டோர் பயிற்சி பட்டறையிலும் faculty development programme மற்றும் FDPஇல் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டார்கள் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

# 7.பன்னாட்டு கருத்தரங்கம்:

கணினி அறிவியல் துறை மற்றும் வணிக நிர்வாகவியல் துறை சார்பாக 19.01.2024 அன்று Life Management Skills என்ற தலைப்பில் பன்னாட்டு கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக திருமதி ரோசரி உதயா மாதவன் Senior Consultant கோலாலம்பூர் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். இதில் பல கல்லூரிகளை சார்ந்த 105 மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.



# 8.a கருத்தரங்கம்

**08.03.2024 அன்று வரலாற்று துறையும் தமிழ்த்துறையும் இணைந்து தமிழ்நாட்டில் தொல்லியல் அகழ்வாராய்ச்சி என்னும் தலைப்பில் ஒரு நாள் தேசிய அளவிலான கருத்தரங்கம் நடைபெற்றது.**



## 8.b கருத்தரங்கம்

வணிக நிர்வாகவியல் துறை சார்பாக 03.02.2024 அன்று கருத்தரங்கம் நடைபெற்றது. அதில் டாக்டர் கே முருகஜோதி இணை பேராசிரியர் அவர்கள் Corporate Etiquettes என்ற தலைப்பில் உரையாற்றினார் இதன் மூலம் கிட்டத்தட்ட 70 மாணவிகள் பயன்பெற்றனர்.

## 8.c கருத்தரங்கம்

வணிகவியல் துறை சார்பாக 24.01.2024 அன்று Stock Market Operation &Trading என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது இக்கருத்தரங்கத்தில் வணிகவியல் துறை மாணவிகள் பங்கு பெற்று பயன்பட்டனர்.



# 9. பயிற்சி பட்டறை

**10.01 2024 அன்று ICT Academy மற்றும் கணினி அறிவியல் துறை இணைந்து Android App Development Power Seminar என்ற தலைப்பில் கணினி அறிவியல் துறை மாணவர்களுக்கு பயிற்சி பட்டறை நடத்தப்பட்டது. இதில் 250க்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர். மேலும் 08.02.2024 அன்று IOT Based Android App Development என்ற தலைப்பில் கணினி அறிவியல் துறை மாணவிகளுக்கு பயிற்சி பட்டறை நடத்தப்பட்டது. இதில் 200க்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.**

**வேதியல் துறையில் 26.09.2023 அன்று House-hold cleaning products and testing of food Adulterants என்ற தலைப்பில் பயிற்சி பட்டறை நடத்தப்பட்டது.**




ARTS COLLE
POST GRADUATE DEPART
GPS Map Camera
Dindigul, Tamil Nadu, India
9XH8+VGX MVM Arts Collage, Meenachinayakkanpatti, Dindigul, Tamil Nadu 624001, India
Lat 10.379228°
Long 77.965831°
24/01/24 10:29 AM GMT +05:30
Google

## 10. கல்வி உதவித்தொகை விபரம்

பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர் மரபினர் கல்வி உதவித்தொகை 2055 மாணவியர்களுக்கும் ஆதிதிராவிடர் சிறப்பு கல்வி உதவித்தொகை 663 மாணவியர்களுக்கும் சிறுபான்மையினர் பிரிவுக்கான கல்வி உதவித்தொகை 56 மாணவியர்களுக்கும் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. தமிழ் மொழிபெயிலும் 450 மாணவியருக்கும் இராணி மங்கம்மாள் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் 73 மாணவியருக்கும் கல்வி உதவித்தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

## 11.புதுமைப்பெண்

இக்கல்வி ஆண்டின் புதுமைப்பெண் உதவித்தொகை திட்டத்தின் பொறுப்பாசிரியராக கணினி அறிவியல் துறை உதவி பேராசிரியர் முனைவர் S.ராஜாத்தி செயல்பட்டார். 2023-24 ம் கல்வி ஆண்டில், 6 முதல் 12 ம் வகுப்பு வரை அரசு பள்ளியில் பயின்று நம் கல்லூரியில் முதலாம் ஆண்டு சேர்ந்துள்ள 307 மாணவிகள் இத்திட்டத்தில் சேர்ந்து மாதம் 1000 ரூபாய் பெற்று பயனடைந்து வருகின்றனர்.

# 12. கல்லூரி மாணவியர் பேரவை நிகழ்வுகள்



# 12. கல்லூரி மாணவியர் பேரவை நிகழ்வுகள்

**இக்கல்வி ஆண்டில் வரலாற்றுத்துறை பேராசிரியை L. பென்சிலா தலைவர் மற்றும் உதவி பேராசிரியர் அவர்கள் கல்லூரி பேரவையின் பொறுப்பாசிரியராக செயல்பட்டார். வரலாற்றுத்துறை பேராசிரியர்களுடன் இணைந்து பேரவை நிகழ்வுகளை மிகச் சிறப்பாக நடத்தி வருகிறார். இந்த ஆண்டில் கல்லூரி பேரவை தேர்தல் 22/09/2023 அன்று ஜனநாயக முறையில் அரசு விதிமுறைகள்படி நடத்தப்பட்டு 11 பொறுப்பு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.**

**அதில் மூன்றாம் ஆண்டு வணிகவியல் துறை மாணவி வே ராகினி பேரவை தலைவியாக வெற்றி பெற்றார். 06.10.2023 அன்று நடைபெற்ற கல்லூரி பேரவை துவக்க விழாவில் சிறப்பு விருந்தினர் முனைவர் பு.புனிதவதி M.Sc.M.phil, P.hd முதல்வர், அரசு கலை அறிவியல் கல்லூரி, ரெட்டியார்சத்திரம். அவர்கள் சிறப்புரை ஆற்றினார் கல்லூரி முதல்வர் பேரவை உறுப்பினர்களுக்கு அடையாள வில்லை அணிவித்து பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.**

**15.08.2023 அன்று சுதந்திர தின விழா மற்றும் 26.1.2024 குடியரசு தின விழா நிகழ்ச்சிகள் மும்மத வழிபாடுகளுடன் கல்லூரி முதல்வர் தலைமையில் நடைபெற்றன. காந்தி ஜெயந்தி மற்றும் தியாகிகள் தின விழா நிகழ்ச்சிகளில் ஆசிரியர்களும் மாணவியர்களும் இணைந்து பிரார்த்தனை கூட்டம் நடத்தினர்.**

## பேரவை நிகழ்வுகள்
















# பேரவை நிகழ்வுகள்

# பேரவை நிகழ்வுகள்










# 13.மன்றக் கூட்டம்

கல்லூரியின் அனைத்து துறைகளிலும் நடத்தப்பட்ட மன்றக் கூட்டங்களில் அந்தந்த துறை சார்ந்த சான்றோர்கள் மூலம் மாணவியருக்கு பயனுள்ள வகையில் சிறப்புரைகள் வழங்கப்பட்டன..



Dept of Tamil

Dept of History






**Dept of Economics**




**Dept of Commerce**



**Dept of Maths**




**Dept of Physics**




**Dept of Chemistry**




**Dept of Zoology**




**Dept of Botony**




**Dept of Computer Science**




**Dept of BBA**

# வேலைவாய்ப்பு மற்றும் தொழில் வழிகாட்டுதல் மையம்

**2023 - 24 ஆம் கல்வியாண்டில், வணிகவியல் துறை உதவி பேராசிரியர் முனைவர். ஜே. ஜே. சௌந்தரராஜ், கல்லூரியின் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் வழிகாட்டுதல் மையத்தின் ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டார்.**

**நிகழ்வு- 1**

**08/08/2023 அன்று, சங்கர் ஐ. ஏ. எஸ் அகாடமியின் மதுரை கிளையுடன் இணைந்து நோக்குநிலை திட்டம் (ORIENTATION PROGRAMME) ஒன்று இளங்கலை இறுதி ஆண்டு படிக்கும் மாணவியர்களுக்கு நடத்தப்பட்டது. அந்நிகழ்வில், மேனாள் கல்லூரி முதல்வர் முனைவர். திருமதி. தே. லக்ஷ்மி அவர்கள் தலைமை வகித்தார். திண்டுக்கல் மாவட்ட காவல்துறை இணை கண்காணிப்பாளர் திரு. கோகுலகிருஷ்ணன் மற்றும் சங்கர் ஐ.ஏ.எஸ் அகாடமியின் மதுரை கிளை மேலாளர் திரு. அர்ஜுன் நாதன் அவர்களும் ஒன்றிய மற்றும் மாநில அரசு பணி தேர்வுகளுக்கு எப்படி தயார்படுத்துவது மற்றும் வெல்வது ஆகிய தலைப்பில் மிகச் சிறப்பாக உரையாற்றினார்கள். இந்நிகழ்வில் 510 மாணவியர்கள் பயனடைந்தனர்.**

## வேலைவாய்ப்பு மற்றும் தொழில் வழிகாட்டுதல் மையம்




While Dr. D. Lakshmi, Former Principal of the College was delivering the Presidential Address – Date 08/08/2023




While Mr. B. Arjun Nathan, Brach Head, Shankar IAS Academy, Madurai was delivering a speech on the topic "How to prepare and pass in Civil Services Exams" – Date 08/08/2023

## நிகழ்வு- 2

**திண்டுக்கல் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டுதல் மையத்துடன் இணைந்து, 16.08.2023 முதல் ஆர்வம் உள்ள இளங்கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்பு பயிலும் இறுதியாண்டு மாணவியர்கள் 149 நபர்களுக்கு டி.என்.பி.எஸ்.சி மற்றும் வங்கிப் பணிக்கான போட்டித் தேர்வுகளுக்கான சிறப்பு வகுப்புகள் இக்கல்வியாண்டு முழுவதும் அனைத்து வேலை நாட்களிலும் கல்லூரி வளாகத்தில் அனுபவமிக்க ஆசிரியர்களால் இலவசமாக நடத்தப்பட்டது.**




**While Dr. J. J. Soundararaj. J. J, the Co-ordinator of the Centre addressing the students on the Inaugural Day of TNPSC, and IBPS Free Coaching classes – Date 16/08/2023.**

## 15. IQAC

2023-2024 ஆம் கல்வி ஆண்டில் IQAC ஒருங்கிணைப்பாளராக முனைவர் KM சுமதி ஆங்கிலத்துறை இணை பேராசிரியர் அவர்களும், IQAC துணை ஒருங்கிணைப்பாளர் முனைவர் K. ராமசாமி கல்லூரி நூலகர் அவர்களும், சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர்.

இந்த ஆண்டிற்கான IQAC செயல்திட்டம் (IQAC Action Plan) எல்லா துறைகளுக்கும் தனித்தனியாக சமர்ப்பித்து வழிநடத்தப்பட்டது. முதலாம் ஆண்டு மாணவிகளுக்கான Bridge Course 4,5,6 மற்றும் 07.07.2023 ஆகிய தேதிகளில் நான்கு நாட்கள் நடைபெற்றது. வளர் இளம் பருவம் ஒரு வரம் வெற்றிக்கு வழி உன் வாழ்க்கை உன் கையில் Unlock Your potential (an Enrichment session) The Awareness on Cyber Crime, The competitive exam and its challenges ஆகிய தலைப்புகளில் சிறப்பு விருந்தினர்கள் சொற்பொழிவு ஆற்றினர். சிறப்பு விருந்தினர்களாக Doctor K. Mahalakshmi President, Indian Medical Association, Dindigul Branch, Dr. M. Valarmathi, Assistant Professor, Department of Tamil, Sri Meenakshi Arts College for Women, Madurai Dr Paul Susheel, Director PS Academy International life coach and Renowned speaker, Mr. G.Loyed sing

**Sub Inspector of police, Cyber Crime, Dindigul மற்றும் Mr. Naveenkumar MTS, Income Tax Department Dindigul ஆகியோர் சிறப்புரை ஆற்றினார். மேலும் Academic and Administrative Audit Internal (அகமதிப்பீட்டு தணிக்கை) 10.08.2023 என்ற தேதியிலும் Academic and Administrative Audit External (புற மதிப்பீட்டு தணிக்கை) 23.08.2023 மற்றும் 24.08.2023 ஆகிய தேதியில் நடைபெற்றது இதற்கு புறமதிப்பீட்டு தணிக்கையாளர்களாக Dr. A. Petha Lakshmi, Principal, Alagappa Government Arts College, Karaikudi. And Dr. P Bhuvaneswari, Principal, Govt Arts College for Women, Nilakottai. அவர்களால் தணிக்கை செய்யப்பட்டது. 2022-23ம் கல்வி ஆண்டிற்கான IQAC AQAR 28/9/2023 அன்று NAAC இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது.**

## 16.NAAC

2023-24 கல்வி ஆண்டு நம் கல்லூரியின் NAAC மூன்றாம் சுழற்சிக்கான அந்தஸ்து பெறுவதற்கு Self Study Report உட்பட அனைத்து பணிகளும் முடிவடைந்து அதற்கான தெளிவுரை (DVV Reports) அனைத்தும் NAAC- Co ordinator முனைவர் மா சத்தியபாமா மற்றும் குழு உறுப்பினர்கள் முனைவர் சுமதி, முனைவர் சாந்தஷீலா, முனைவர் ஈத்தல் பாலின், முனைவர் ராமசாமி திருமதி சுகன்யா, மற்றும் செல்வி முத்தமிழ் செல்வி, அவர்களால் NAAC Portalல் பதிவேற்றம் செய்து முடிக்கப்பட்டு விட்டது.

## 17.RUSA

**2023 -2024 ஆம் கல்வியாண்டில் RUSA பொறுப்பாசிரியர்களாய் வேதியல் துறை இணை பேராசிரியர் முனைவர் மா. தனலட்சுமி மற்றும் ஆங்கிலத்துறை உதவி பேராசிரியர் முனைவர் ஆர் கார்த்திகா தேவி ஆகியோர் சிறப்பாக செயல்பட்டு வருகிறார்கள்.**

**31.08.2023 அன்று RUSA அலுவலகம், DOTE சென்னையில் இருந்து மின்னஞ்சல் மூலம் பொறுப்பாக கடிதத்தின் படி, நமது கல்லூரியில் BASE DATA தயாரிக்கப்பட்டு நம் கல்லூரி முதல்வர் அவர்களின் மின்னஞ்சல் மூலம் RUSA அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.**

**20.09.2023 அன்று RUSA அலுவலகத்தில் இருந்து மின்னஞ்சல் மூலம் பெறப்பட்ட RUSA 100 Weekly Online Workshop (WOW) மற்றும் RUSA – VAIKOM Centenary Quiz பற்றிய தகவல்கள் நமது கல்லூரியின் whatsapp மூலம் அனைத்து ஆசிரியர்களுக்கும், மாணவிகளுக்கும் தெரிவிக்கப்பட்டு அவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.**

**19.12.2023 அன்று RUSA அலுவலகம் மின்னஞ்சல் மூலம் பெறப்பட்ட கடிதத்தின் படி பி PM - USHA 3.0வில், ரூபாய் 5 கோடிக்கு Proposal for Grants to strengthen college and Proposal for Gender inclusion and Equity Initiative ஆகியவை, கல்லூரி பொறுப்பு முதல்வர் முனைவர் க.நாகநந்தினி, அவர்களால் சீரிய முறையில் பெறப்பட்டது.**

## 18. NSS

## நாட்டு நலப்பணி திட்டம் 2023-2024

அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக நாட்டு நலப்பணி திட்டத்தின் சார்பில் எமது கல்லூரியில் திட்டப் பணிகள் சிறப்பான முறையில் நடத்தப்பட்டு வருகின்றன. இக்கல்வியாண்டில் நாட்டு நலப்பணித்திட்ட பொறுப்பாசிரியர்களாக தாவரவியல் துறை இணை பேராசிரியர் முனைவர் S. சிவசங்கரி, வரலாற்றுத் துறை உதவிப், பேராசிரியர் முனைவர் ரா.முத்து, வணிகவியல் துறை உதவி பேராசிரியர் கா. சபிதா, ஆகியோர் செயல்பட்டு வருகின்றனர் .

**20.06.2023 இல் நடைபெற்ற போதைப்பொருள் ஒழிப்புத்தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணியில் கலந்து கொண்டு மாணவியர்கள் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி *மற்றும்* உறுதிமொழியும் முதல்வர் முன்னிலையில் எடுக்கப்பட்டது. 24.06.2023 அன்று அடல்சன் ஹெல்த் கேம் கல்லூரி வளாகத்தில் தேசிய வளர் இளம் பருவத்தினர் நலத்திட்ட மூலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் சீலப்பாடி இணைந்து மாணவியர்களுக்கு ரத்தம், கண் மற்றும் பல் பரிசோதனை நடத்தப்பட்டது. முகாமில் சுமார் 400 கலந்து கொண்டு பயனடைந்தனர்.**



**11.08.2023 அன்று கஞ்சா மற்றும் போதை பொருள் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.**

**29.08.2023 அன்று வடமலையான் மருத்துவமனை மூலம் ஒரு நாள் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் அனைத்து பேராசிரியர்கள் மற்றும் அனைத்து மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.**

**15.09.2023 அன்று உலக இருதய தினத்தை முன்னிட்டு இருதயம் மற்றும் சர்க்கரை நோய் விழிப்புணர்வு கருத்தரங்கம் நடத்தப்பட்டது.**

**18.10.2023 அன்று மேரி மாத்தி மேரா தேஷ் என்ற தலைப்பில் கல்லூரியில் விழிப்புணர்வு பேரணியும், போட்டிகளும் நடத்தப்பட்டது. மாணவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன. 30.10.2023 காதி மகோத்சவ திருவிழாவை முன்னிட்டு கல்லூரி வளாகத்தில் மாணவிகளுக்கு இடையே பேஷன் ஷோ நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசு வழங்கப்பட்டன. மேலும் காதி பொருட்களை வாங்க வேண்டும் என மாணவர்களிடையே அறிவுறுத்தப்பட்டது. காதி கதர் ஆடைகள் கண்காட்சியும் நடத்தப்பட்டன.**

30.10.2023 அன்று இரும்பு மனிதர் சர்தார் வல்லபாய் பட்டேல் பிறந்த நாளை ஒட்டி தேசிய ஒற்றுமை தினம் உறுதிமொழி மாணவர்கள் இடையே எடுக்கப்பட்டது.

01.11.2023 அன்று ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரம் முன்னிட்டு நமது கல்லூரியில் விழிப்புணர்வு கருத்தரங்கம் மற்றும் விழிப்புணர்வு உறுதிமொழி எடுக்கப்பட்டது.

20.11.2023 கலைஞர் நூற்றாண்டு விழா முத்தமிழ் தேர் வருகையை வரவேற்கும் நிகழ்ச்சியில் நமது மாணவியர்கள் மற்றும் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டு வரவேற்றனர்.

12.01.2024 அன்று இளைஞர் எழுச்சி நாளாக கொண்டாடப்பட்டு முதல்வர் அவர்கள் மாணவர்களுக்கு இடையே உரையாற்றினார். 19.01.2024 அன்று நான் முதல்வர் திட்டத்தின் கீழ் பள்ளி மாணவர்களுக்கு உயர் கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சியில் நமது கல்லூரி வளாகம் நூலகம் மற்றும் அனைத்து துறைகளுக்கும் மாணவியர்களை அழைத்துச் சென்று உயர் கல்வி ஆர்வத்தை வளர்க்கும் வகையில் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் மூலம் மிகச் சிறப்பாக செய்யப்பட்டது

**23.012024 அன்று பேரிடர் பாதுகாப்பு பற்றி ஒருநாள் பயிற்சி மாணவியர்கள் இடையே நடத்தப்பட்டது.**

**24.1.2024 அன்று வாக்காளர் விழிப்புணர்வு பேரணியில் நமது மாணவிகள் கலந்து கொண்டு பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.**



31.08.2023 மற்றும் 09.02.2024 அன்று தேசிய குடற்புழு நீக்க நாள் ஆகிய நாட்களில் குடற்புழு நீக்க மாத்திரைகள் நாட்டு நல பணி திட்டம் சார்பாக எமது கல்லூரியில் உள்ள அனைத்து மாணவிகளுக்கும் வழங்கப்பட்டது.

மேலும் ஒவ்வொரு வியாழக்கிழமையும், அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இருந்து வழங்கப்படும், சத்து மாத்திரைகளை ஒவ்வொரு வாரமும் நாட்டு நல பணித்திட்டம் மூலமாக நமது கல்லூரி மாணவிகளுக்கு சிறப்பான முறையில் வழங்கப்பட்டு வருகின்றன.

11.03.2024 அன்று திண்டுக்கல் மாவட்ட காவல்துறை சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு மற்றும் நாட்டு நல பணித்திட்டம் இணைந்து சமத்துவம் காண்போம் ஒன்றிணைவோம் என்ற தலைப்பில் மாபெரும் விழிப்புணர்வு முகாம் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது.

சமத்துவம் காண்போம் என்ற தலைப்பில் மாணவிகள் இடையே பேச்சுப்போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

06.03.2024 அன்று வாக்களிப்பது எனது கடமை என்ற தலைப்பில் மாணவிகளுக்கு போட்டியில் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

## 19. கூட்டுறவு பண்டகச்சாலை

எம் கல்லூரியில் 20 அம்ச திட்டத்தின் கீழ் 1961 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மாணவியர் ஆசிரியர் கூட்டுறவு பண்டகசாலை மற்றும் பொது சிற்றுண்டி சாலை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக்கல்வியாண்டில் வணிகவியல் துறை திரு மு. தேவகுமார், அவர்கள் தலைவராகவும் பொருளியல் துறை உதவி பேராசிரியர் முனைவர் திரு பெ.குணசேகரன் அவர்கள், உப தலைவராகவும், விலங்கியல் துறை உதவி பேராசிரியர் இரா வகிதா, தாவர உயிர் தொழில்நுட்பவியல் துறை உதவி பேராசிரியர் திரு ரா லட்சுமணன், ஆசிரியர் அல்ல பணியாளர் த.ஹர்சலதா முதலாம் ஆண்டு வணிகவியல் துறை மாணவி மா.முனிஸ்சரண்யா, மற்றும் முதலாம் ஆண்டு இளைஞர் குழு மாணவி கா.மதுமிதா ஆகிய ஐந்து பேர் நிர்வாக குழு உறுப்பினர்களாக பொறுப்பேற்று ஆலோசனை குழுவுடன் கலந்து ஆலோசித்து மொத்தம் ஏழு உறுப்பினர்களாக இதன் பணிகளை திறம்பட செயல்படுத்தி வருகின்றனர்.

நம் கூட்டுறவு பண்டகசாலை தொடர்ந்து 2016-2017,-2017-2018, 2018-2019 மற்றும் 2021-2022 திண்டுக்கல் மாவட்டத்தின் சிறந்த மாணவர் கூட்டுறவு பண்டக சாலையாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஆட்சியர் அவர்களிடமிருந்து பாராட்டு சான்றிதழும் கேடயமும் பெற்றுள்ளது. பெருமைக்குரியது இலாப நோக்கோடு இல்லாமல் சேவை மட்டுமே இலக்காக கொண்டு செயல்பட்டு நமது கூட்டுறவு பண்டகசாலையில் மாணவிகளுக்கு தேவையான ஸ்டேஷ்னரி எழுதுபொருட்கள் புத்தகங்கள் மற்றும் சுகாதாரமான முறையில் ஆரம்பிக்க ஆரோக்கியமான தின்பண்டங்களும் குறைந்த விலையில் வழங்கப்பட்டு வருகிறது.

# 20. இளைஞர் செஞ்சிலுவை சங்கம் 2023-2024

**2023-2024 ஆம் ஆண்டு கல்வி ஆண்டில் இளைஞர் செஞ்சிலுவை சங்கதிட்ட ஒருங்கிணைப்பாளராக முனைவர் J.தனசேகரன், இணை பேராசிரியர், வரலாற்றுத்துறை, அவர்களால் 21/8/2023 அன்று கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு இரத்ததான முகாம் ஏற்பாடு செய்து சிறப்பாக நடைபெற்றது.**





இதில் நமது கல்லூரி பேராசிரியர்கள் அலுவலக நண்பர்கள் மற்றும் 30க்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்து கொண்டனர் 18.10.2023 அன்று நமது கல்லூரியின் இளைஞர் செஞ்சிலுவை சங்கம் சார்பாக இளைஞர் செஞ்சிலுவை சங்க தன்னார்வலர்களுக்கு அனைத்து விதமான முதல் உதவி பற்றிய ஒரு நாள் பயிலரங்கம் நடைபெற்றது. முகாமில் நமது கல்லூரி இளங்கலை இரண்டாம் ஆண்டு செஞ்சிலுவை சங்க மாணவிகள் 120 பேர் கலந்து கொண்டனர்.

# 21.PTA

**16 3/2024 ஆம் ஆண்டு நம் கல்லூரியில் பெற்றோர், ஆசிரியர் கழக கூட்டமானது PTA பொறுப்பாசிரியர் முனைவர் ஈத்தல் பாலின் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டது. கல்லூரி பொறுப்பு முதல்வர் முனைவர் K. நாகாநந்தினி அவர்கள் தலைமை உரை ஆற்றினார்கள். PTA கழக உறுப்பினர்கள் முனைவர் சத்தியபாமா, Dr. ENOLA, முனைவர் ராஜேஸ்வரி, முனைவர் அருள்மொழி மற்றும் ஆசிரியர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பு செய்தனர். கூட்டத்தின் இறுதியில் கல்லூரியில் நிறை குறைகள் குறித்து எளிய பின்னூட்ட படிவம் பூர்த்தி செய்து பெறப்பட்டது.**

# 22. பழைய மாணவியர் சங்கம்

**2023-2024 ஆம் கல்வியாண்டில் நமது கல்லூரியின் பழைய மாணவியர் சங்கம் ஆனது திறம்பட செயல்பட்டு வருகிறது. பழைய மாணவியர் சங்கத்தின் தலைவராக முனைவர் J. தேன்மொழி புவியியல் துறைத்தலைவர் மற்றும் இணைப்பேராசிரியர் அவர்களும் செயலாளராக முனைவர் KM சுமதி இணைப்பேராசிரியர் ஆங்கிலத் துறை அவர்களும், பொருளாளராக முனைவர் C பிளாரன்ஸ் அன்னாள், இணைப்பேராசிரியர் புவியியல் துறை அவர்களும் பொறுப்பேற்று நடத்தி வருகின்றனர். பழைய மாணவியர் சங்கத்தின் பதிவு புதிய உறுப்பினர்களுடன் இந்த கல்வியாண்டில் புதுப்பிக்கப்பட்டு நன்முறையை செயல்பட்டு வருகிறது .**

# 23. விளையாட்டு துறை 2023-2024

2023 2024 ஆம் ஆண்டு கல்வியாண்டில் முனைவர் R. வகிதா இணை பேராசிரியர் விலங்கியல் துறை அவர்கள் விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியராக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி பணியாற்றி வருகிறார். திருமதி சங்கீதா அவர்கள் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலம் விளையாட்டு துறை பொறுப்பாசிரியராக பணியாற்றி வருகிறார். செல்வி பிரபா மூன்றாம் ஆண்டு வேதியியல் துறை மாணவி விளையாட்டு துறை செயலாளராக பணியாற்றி வருகிறார்.

அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் கல்லூரிகளுக்கு இடையேயான Ball Badminton போட்டியானது 06.10.2023 மற்றும் 07.10.2023 ஆகிய இரு நாட்களில் அருள்மிகு பழனியாண்டவர் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது. இப்போட்டியில் நமது கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டு இரண்டாம் பரிசினை பெற்று கோப்பையை வென்றுள்ளனர்.

அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் கல்லூரிகளுக்கு இடையேயான Shuttle Badminton போட்டியானது 17.10.2023 மற்றும் 18.10.2023 ஜெயராஜ் அன்னபாக்கியம் கலை கல்லூரியில் நடைபெற்றது. இப் போட்டியில் நமது கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டு மூன்றாம் பரிசினை பெற்றுள்ளார்கள்.

Open State Level Silambam Competition இல் Single Stick முதல் பரிசையும், Double Stick ல் இரண்டாம் பரிசு பரிசோதனை பெற்றுள்ளனர். மேலும் 08.11.2023 அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற Open National Level Competition ல் Single Stick முதல் பரிசையும், Double Stick ல் இரண்டாம் பரிசினையும் சுருளில் முதல் பரிசையும் பெற்றுள்ளனர்.

கல்லூரி விளையாட்டு விழாவில் விளையாட்டு விழாவிற்கான விளையாட்டு போட்டிகள் 05.02.2024 நாள் முதல் 09.02.2024 வரை நடைபெற்றது. இதில் Ball Badminton, Handball, Volleyball, Shuttle Badminton, Kabaddi, Kho Kho, Long Jump, High jump, Javelin, Shot Put, Triple Jump, 100 Metre, 200Metre, 400 Metre, 100 Metre relay போன்ற போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கல்லூரி விளையாட்டு விழாவில் பரிசுகள் வழங்கப்பட்டது.

மேலும் கல்லூரி விளையாட்டு விழாவில் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் ஆசிரியர் அல்லா பணியாளர்கள் அனைவருக்கும் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டுள்ளது.

# 24. நுண்கலை நிகழ்ச்சிகள் 2023-2024

18.03.2024 இல் ஐம்பெரும் விழாவில் முதல் நாளாக நுண்கலை மன்ற விழா கல்லூரி முதல்வர் K. நாகநந்தினி அம்மா தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக பல் சுவை அரசு KMG ஆதி பாண்டியன் கின்னஸ் சாதனையாளர் தலைவர், மக்கள் தொடர்பு துறை, கற்பகம் கல்வி நிறுவனங்கள், கோயமுத்தூர், அவர்கள் கலந்துகொண்டு மாணவிகளுக்கு உற்சாகம் ஊட்டும் வகையில் பேசியும் நுண்கலை போட்டியில் வென்ற மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கியும் சிறப்பித்தார்.

# 25. நுகர்வோர் மன்றம் 2023-2024

நமது கல்லூரியில் தேசிய நுகர்வோர் பாதுகாப்பு தினம் 28.12.2023 அன்று கொண்டாடப்பட்டது. இக்கல்லூரியின் முதல்வர் K.நாகாநந்தினி அவர்கள் தலைமை தாங்கினார், சிறப்பு விருந்தினராக SP சுப்பிரமணியன் தலைவர் நுகர்வோர் பாதுகாப்பு மையம் மற்றும் S.நாகராஜன் செயலர், நுகர்வோர் பாதுகாப்பு மையம் திண்டுக்கல், ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை வழங்கினர். நுகர்வோர் மன்ற ஒருங்கிணைப்பாளர் முனைவர் R.அப்பாஸ் வரலாற்று துறை பேராசிரியர் விழாவினை ஏற்பாடு செய்தார். விழாவில் மாணவிகளுக்கு உணவு மற்றும் நுகர் பொருள் தரம் குறித்து சிறப்புரை வழங்கப்பட்டது.

31.01.2024 அன்று நாள் முதல்வன்மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இதில் நமது கல்லூரியின் சார்பாக முனைவர் பா.முருகேஸ்வரி இணை பேராசிரியர் அவர்கள் கலந்துகொண்டு உயர் கல்வி முன்னேற்றம் குறித்து விவாதிக்கப்பட்டது. 28.02.2024 அன்று நான் முல்வன் மாவட்ட அளவிலான வேலைவாய்ப்பு முகாம் நமது கல்லூரியில் நடைபெற்றது. சுமார் 3311 மாணவ மாணவியர்கள் இணைய வழி மூலமாக பதிவு செய்தனர். திண்டுக்கல் மாவட்டத்திலிருந்து 24 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இருந்து 2463 மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர். தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து 20 கம்பெனிகள் கலந்து கொண்டனர். இதில் 420 மாணவ மாணவியர்களுக்கு பணிநியமான ஆணை வழங்கப்பட்டது.

# 26. நான் முதல்வன்2023-2024

2023-2024 ஆம் ஆண்டிற்கான நமது கல்லூரியில் நான் முதல்வன் திட்டம் முனைவர் பா.முருகேஸ்வரி இணைப்பேராசிரியர் வரலாற்று துறை அவர்களின் மேற்பார்வையின் திறம்பட பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இளங்கலை, இளம் அறிவியல் முதலாம் ஆண்டு, இரண்டாம் ஆண்டு, மூன்றாம் ஆண்டு மாணவிகளுக்கு ஆறு மாத கால பருவ வகுப்புகள் இணைய வழி மற்றும் நேரலையாக நடத்தப்பட்டு வருகின்றன.



19.01.2024 அன்று நான் முதல்வன் திட்டத்தின் கீழ் அரசு பள்ளி மாணவர்களுக்கான உயர்கல்வியின் முக்கியத்துவம் வழிகாட்டல் கல்லூரி களப்பயணம் நமது கல்லூரியில் நடைபெற்றது. இதில் உயர்கல்வி முக்கியத்துவம் மற்றும் கல்லூரியின் சிறப்பு அம்சங்கள் குறித்து அரசு பள்ளி மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

Sensitization and Review meeting மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இதில் நமது கல்லூரியின் சார்பாக முனைவர் பா. முருகேஸ்வரி அவர்கள் கலந்துகொண்டு உயர் கல்வி முன்னேற்றம் குறித்து விவாதிக்கப்பட்டது.

28.02.2024 அன்று நான் முதல்வன் மாவட்ட அளவிலான வேலை வாய்ப்பு முகாம் நமது கல்லூரியில் நடைபெற்றது. சுமார் 3311 மாணவ/மாணவிகள் இணையவழி மூலமாக பதிவு செய்தனர். திண்டுக்கல் மாவட்டத்தில் இருந்து 24 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இருந்து 2463 மாணவ/ மாணவிகள் கலந்து கொண்டனர். தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து 20கம்பெனிகள் கலந்து கொண்டனர். இதில் 420 மாணவ மாணவியர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

# 27. மகளிர் தினம் 2023-2024

கல்லூரி பேரவையின் சார்பாக 08.03.2024 அன்று கல்லூரி முதல்வர் தலைமையில் மகளிர் தினம் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்ச்சியின் போது நடனம், கவிதை, சிலம்பம், கட்டுரை ஆகியவற்றில் பல்வேறு துறையை சார்ந்த மாணவிகள் கலந்து கொண்டு நிகழ்ச்சி சிறப்பித்தார்கள் மேலும் 08.03.2024 சர்வதேச மகளிர் தினம் பொருளாதாரத் துறையின் சார்பாக கொண்டாடப்பட்டது. இதில் பொருளாதாரத் துறை ஆசிரியர்கள் மாணவிகள் மற்றும் முன்னாள் மாணவிகள் கலந்து கொண்டு





# 28. உலக அறிவியல் தினம் 2023-2024

இயற்பியல் துறை சார்பாக 26.02.2024 மற்றும் 27.02.2024 ஆகிய இரண்டு தினங்கள் உலக அறிவியல் தினம் கொண்டாடப்பட்டது. பல்வேறு போட்டிகள் நடைபெற்றது. போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசு வழங்கப்பட்டது.



Dept of Computer Science



Dept of Botony

# 29. வனவிலங்கு உயிரியல் வார விழா மற்றும் பறவைகள் கணக்கெடுப்பு 2023-2024

விலங்கியல் துறையின் சார்பாக இக்கல்வியாண்டில் 10.08.2023 அன்று உலக சிங்கங்கள் தினம் கொண்டாடப்பட்டது. 27.01.2024 மற்றும் 28.01.2024 அன்று மாவட்ட வனத்துறையோடு இணைந்து பறவைகள் கணக்கெடுப்பு பணியில் விலங்கியல் துறை ஆசிரியர்கள் மற்றும் மாணவிகள் ஆர்வத்துடன் பங்கு பெற்றனர்.

தமிழக வனத்துறை சார்பில் திண்டுக்கல் மாவட்ட வனத்துறையின் மூலம் ஒத்திசைக்கப்பட்ட பறவைகள் கணக்கெடுப்பு 27.01.2024 இல் இருந்து 28.01.2024 வகை நடத்தப்பட்டது. இதில் வேதியல் துறையை சார்ந்த நான்கு மாணவிகள் கலந்து கொண்டனர்.

## 30. Best practices:

இக்கல்லூரி மறைந்த முதல்வர் T. லட்சுமி அவர்களின் வழிகாட்டுதலின்படி நமது கல்லூரியில் உள்ள கழிப்பறைகளை சுத்தம் செய்வது தேவையான பிணை வேதி பொருளை தயாரிக்கும் பணியினை ஏற்று கல்லூரி Amenity Fund லிருந்து ரூபாய் 1700/-க்கு தரமான வேதி மூலப் பொருட்களை வாங்கி வேதியியல் துறை பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் இணைந்து 106 லிட்டர் தரமான பிணை வேதிப்பொருளை தயாரித்து கல்லூரிக்கு வழங்கப்பட்டது.

## 31.a. Internship (Dept of Economics)

"Sri Ramanaa Clothing "என்ற நிறுவனத்திற்கு இரண்டாம் ஆண்டு முதல் சுழற்சியின் பயிலும் 57 மாணவிகள் 19 .02.2024 முதல் 28.02.2024 தொழில் பயிற்சிக்காக சென்றனர்.

நம்ம ஆனந்த சில்க்ஸ் மற்றும் ரெடிமேட்க்கு இரண்டாம் ஆண்டு சுழற்சியில் பயிலும் 34 மாணவிகள் 22.02.2024 முதல் 25.02.2024 வரை தொழில் பயிற்சிக்காக சென்றனர்.

# 31.b. Internship (Dept of Maths)

**கணிதத்துறையில் இரண்டாம் ஆண்டு இளம் அறிவியல் கணிதம் பயிலும் 61 மாணவிகள் 01.02.2024 முதல் 13.02.2024 வரை தொழில்முறை பயிற்சிக்காக திண்டுக்கல்லில் உள்ள Mega Soft Computers பயிற்சி மையத்திற்கு 10 நாட்கள் சென்று Full Stock Development என்ற தலைப்பில் பயிற்சி மேற்கொண்டனர் இப் பயிற்சியின் முடிவில் மாணவிகளுக்கு அந்நிறுவனத்தில் இருந்து பயிற்சி சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.**



# 31.C. Internship (Dept of Commerce)

**12.02.2024 முதல் 21.02.2024 வரை படிப்பு இடை பயிற்சியில் இரண்டாம் ஆண்டு வணிகவியல் முதல் மற்றும் இரண்டாம் சுழற்சி மாணவிகள் பல்வேறு நிறுவனங்களுக்கு சென்று பயிற்சி பெற்றனர்.**



# 31.d. Internship (Dept of Chemistry)

**வேதியல் துறையில் இரண்டாம் ஆண்டு மாணவிகள் 06.12.2023 இருந்து 16.12.2023 வரை தொழில்முறை பயிற்சி மேற்கொண்டனர். இதில் பத்து மாணவிகள் காந்திகிராம லக்ஷ்மி சேவா சங்கத்திலும் 13 மாணவிகள் திண்டுக்கல் மாவட்ட வட்டப்பாறை அம்மன் பால் மையத்திலும் பயிற்சி மேற்கொண்டனர்.**






# 31.e. Internship (Dept of Geography)

**2023 24 ஆம் கல்வியாளில் புவியியல் துறையில் இளம் அறிவியல் இரண்டாம் ஆண்டு பயிலும் 67 மாணவியர்கள் 5 3 2024 முதல் 15 3/2024 வரை தொழில்முறை பயிற்சிக்காக புவியியல் துறை மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திற்கு 10 நாட்கள் சென்று Fundamentals of Mapping Techniques by Using GIS Software என்ற தலைப்பில் பயிற்சி மேற்கொண்டனர் இப்ப பயிற்சியின் முடிவில் மாணவிகளுக்கு பயிற்சி சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.**



# 31.f. Internship (Dept of History)

**2023-24 ஆம் கல்வியாளில் புவியியல் துறையில் இளம் அறிவியல் இரண்டாம் ஆண்டு பயிலும் 67 மாணவியர்கள் 05.03.2024 முதல் 15.03.2024 வரை தொழில்முறை பயிற்சிக்காக புவியியல் துறை மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திற்கு 10 நாட்கள் சென்று Fundamentals of Mapping Techniques by Using GIS Software என்ற தலைப்பில் பயிற்சி மேற்கொண்டனர் இப்ப பயிற்சியின் முடிவில் மாணவிகளுக்கு பயிற்சி சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.**



## 32.a. Industrial Visit (Dept of Commerce)

15.02.2024 அன்று மூன்றாம் ஆண்டு இளநிலை வணிகவியல் இரண்டாம் சுழற்சி மாணவியரும், 26.02.2024 அன்று மூன்றாம் ஆண்டு இளநிலை வணிகவியல் முதல் சுழற்சி மாணவியரும், ஆசிரியர்களுடன் Naga Food Ltd., இன்டஸ்ட்ரியல் விசிட் சென்று பயனடைந்தனர்.

# 32.b. Industrial Visit (Dept of Computer Science)

12.02.2024 அன்று கணினி அறிவியல் துறை இளநிலை மூன்றாம் ஆண்டு மாணவிகள் 65 பேர் மற்றும் பொறுப்பு ஆசிரியர்கள் செல்வி பா. முத்தமிழ், செல்வி மற்றும் திருமதி தா.ஜெயந்தி ஆகிய இவர்களுடன் திண்டுக்கல் Naga Foods Ltd தொழிற்சாலைக்கு Industrial Visit சென்று வந்தனர்.



# 32.c. Industrial Visit (Dept of Botony)

தாவரவியல் துறை இளம் அறிவியல் முதலாம் ஆண்டு இரண்டாம் ஆண்டு மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவிகள் இன்டஸ்ட்ரியல் விசிட்டாக Naga Foods Ltd தொழிற்சாலைக்கு 14.03.2024 அன்று பார்வையிட்டும் தயாரிக்கும் முறைகள் பற்றியும் அறிந்து பயனடைந்தனர்.

# 32.d. Industrial Visit (Dept of Chemistry)

**01.02.2024 மற்றும் 02.02.2024 ஆகிய இரு தேதிகளில் Naga Foods Ltd தொழிற்சாலையை மாணவியரும், ஆசிரியரும் பார்வையிட்டனர் 01.02.2024 அன்று 52 மாணவிகளும் ஐந்து ஆசிரியரும் ஒரு ஆய்வக உதவியாளரும் பார்வையிட்டனர். 02.02.2024 அன்று 47 மாணவிகளும் ஐந்து ஆசிரியரும், இரண்டு ஆய்வக உதவியாளரும் பார்வையிட்டனர்.**



# 32.e. Industrial Visit (Dept of Bachelor of Business Administration)

**13.10.2023 அன்று காந்திகிராமம் அறக்கட்டளையைச் சார்ந்த நிறுவனங்கள் மற்றும் 17.10.2023 அன்று RAAJ Milk, Dindigul, மற்றும் 27.02.2024 அன்று திண்டுக்கல்லில் உள்ள NAGA FOODS PVT Ltd, என்ற நிறுவனத்திற்கும் FIELD VISIT சென்று வந்தனர் NAGA FOODS PVT Ltd நிறுவனத்தில் MARKETING STRATEGIES என்ற தலைப்பில் மாணவிகளுக்கு சிறப்பு வகுப்பு எடுக்கப்பட்டது. இதில் 50 மாணவிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.**



# 33.a. Extension Activity(Dept of Computer Science)

**19.2.2024 அன்று திண்டுக்கல் மீனாட்சி நாயக்கன்பட்டியில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளிக்கு Extension Activity காக சென்றனர். அதன்படி ஆறு முதல் ஒன்பதாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு கணினி அறிவியல் துறையின் பயன்பாட்டிற்கான Model Exhibition பற்றியும் மேலும் MS Office பயன்பாடு பற்றியும் கற்றுக் கொடுத்தனர்.**



# 33.b . Extension Activity (Dept of Economics)

பொருளியல் துறையில் பயிலும் மூன்றாம் ஆண்டு மாணவிகள் 14/2/2024 அன்று களப்பணிக்காக திண்டுக்கல் மாவட்டம், A வெள்ளோடு கிராமத்திற்கு சென்று கிராம மக்கள் இடையே விழிப்புணர்வு பேச்சுகள் மற்றும் நாடகங்கள், பெண் கல்வியின் அவசியம், மரம் வளர்ப்பு பற்றிய விழிப்புணர்வு மற்றும் குழந்தை திருமண ஒழிப்பு பற்றியும் வழங்கினார்கள்.




EXTENSION ACTIVITIES –14.02.2024 (A. VELLODU)

# 33.c . Extension Activity (Dept of BBA)

**இத்துறையின் மாணவிகள் சமுதாயத்தில் பங்களிப்பாக அருகில் இருக்கும் அரசு பள்ளி மற்றும் அங்கன்வாடி மையம் ஆகியவற்றிற்கு சென்று தலைமை பண்புகளை பற்றி விளையாட்டு மூலமாக புரிந்து கொள்ள உதவி புரிந்தனர்.**



# 33.d. Extension Activity (Dept of Maths)

**22.02.2024 அன்று எம்.வி.எம் செல்லமுத்து அழகரத்தினம் கல்வியல் கல்லூரியில் நடைபெற்ற MVMCA Education Expo Ceremony, மூன்றாம் ஆண்டு இளம் அறிவியல் மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.**

**23.02.2024 அன்று திண்டுக்கல் சிப்காட் வளாகத்தில் அமையப்பெற்ற ஆவின் பாலகம் மற்றும் அதனை சுற்றியுள்ள தொழிற்சாலைகளுக்கு கணிதத்துறை இளம் அறிவியல் இரண்டாம் ஆண்டு பயிலும் 61 மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.**



# 33.e. Extension Activity (Dept of Chemistry)

வேதியல் துறை சார்பாக 13.02.2024 அன்று திண்டுக்கல் மாவட்டம் குரும்பபட்டி, தர்மத்துப்பட்டி, திண்டுக்கல் பெண்கள் சுய தொழில் துவங்குவதற்கு ஏற்ற வழிமுறைகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விரிவாக்க கல்வி செயல்பாடு ஏற்பாடு செய்யப்பட்டது மூன்றாம் ஆண்டு வேதியியல் பயிலும் 24 மாணவிகள் மூன்று பேராசிரியர்கள் மற்றும் ஒரு ஆய்வக உதவியாளர் பங்கேற்றனர்.






# 33.f. Extension Activity (Dept of Geography)

**16.03.2023 அன்று புவியியல் துறையில் இளங்கலை இரண்டாம் ஆண்டு மாணவிகள் 32 பேர் விரிவாக்க கல்வி செயல்பாட்டிற்கு Network Connectivity of Traffic Survey of Dindigul என்ற தலைப்பில் களப்பணி மேற்கொண்டு பயனடைந்தனர்.**



# 34.a புரிந்துணர்வு ஒப்பந்தம் (Dept of Zoology)

விலங்கியல் துறையில் நான்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செயல்பட்டு வருகிறது. புனித அந்தோனியார் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி பழனியில் அமைந்திருக்கும் பட்டுப்புழு வளர்ச்சி மையம் மற்றும் நாகா மில்லோடும் மற்றும் டி3 ரத்த வங்கியில் ஒப்பந்தம் செய்யப்பட்டு கல்வி குறித்தான பயிற்சிகளை அளிக்கப்பட்டு மாணவிகள் பயனடைந்து வருகின்றனர்.

# 34.b. புரிந்துணர்வு ஒப்பந்தம் (Dept of Maths)

14.02.2019 அன்று நாகா உணவு தொழிற்சாலையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்த வகையில் நாகா மில்லில் தயாரிப்பு பிரிவு மற்றும் பதப்படுத்தப்படும் பிரிவுகளை இளம் அறிவியல் மூன்றாம் ஆண்டு கணிதத்துறையில் பயிலும் 81 மாணவிகள் பார்வையிட்டு பயனடைந்தனர்.

## 34.c. புரிந்துணர்வு ஒப்பந்தம் (Dept of Geography)

**08.02.2024 அன்று நாகா உணவு தொழிற்சாலையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்த வகையில் நாகா மில்லின் தயாரிப்பு பிரிவு மற்றும் பதப்படுத்தும் பிரிவுகளை இளம் அறிவியல் முதலாம் ஆண்டு புவியியல் துறையில் பயிலும் 60 மாணவியர்கள் பார்வையிட்டு பயனடைந்தனர்.**

# 35. Library

நமது கல்லூரி நூலகத்தில் ரூபாய் மூன்று லட்சத்துக்கு 837 புத்தகங்கள் வாங்கப்பட்டுள்ளன.

N-List E. Resource பெறப்பட்டுள்ளது.

E-Gate Register அறிமுகப்படுத்தப்பட்டு Koha மென்பொருள் மூலம் கணினிமயமாக்கப்பட்டுள்ளது.

UG முதலாம் ஆண்டு மாணவியருக்கு இரண்டு நாட்கள் Orientation Programme PG final year students National workshop மற்றும் Webminar நடத்தப்பட்டது. National Webminar Workshopம் நடத்தப்பட்டது.

பொது நூலக பேரவை கூட்டம் 15.11.2023 அன்று Exposure visit 19.02.2024 அன்றும் தேசிய நூலக வாரம் 14 நவம்பர் இருந்து 20 நவம்பர் வரை நடைபெற்றது.



**LIBRARY ASSOCIATION MEETING**





**PG Intramural Seminar**

புத்தக கண்காட்சி மார்ச் 11 மற்றும் 12ம் தேதி அன்று நடத்தப்பட்டது.

இக்கல்வியாண்டில் 9542 பயனாளர்கள் நூலகத்திற்கு வருகை புரிந்துள்ளனர். 50124 ஆன்லைன் பயனாளர்களும் நூலகத்தை பயன்படுத்தி உள்ளனர். BBA மாணவிகளுக்கு நூலகம் Tally Lab ஆகவும் பயன்படுத்தப்பட்டது. கொடுக்கப்பட்டுள்ளது சேர்க்கை மையமாகும் பயன்படுத்தப்பட்டது.

## 36. NIRF/

**NIRF: 2023-24 ஆம் கல்வியாண்டின் தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பு ( NIRF) மற்றும் உயர்கல்விக்கான அகில இந்திய ஆய்வு (AISHE) பொறுப்பாசிரியராக கணினி அறிவியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் முனைவர் அ . சுப்பிரமணி பொறுப்பேற்று சிறப்பாக செயல்பட்டு வருகிறார். 2022-2023 -ஆம் ஆண்டிற்கான தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்புக்கு தேவையான இக்கல்லூரி தரவுகளை 16.12.2023 அன்றும், உயர்கல்விக்கான அகில இந்திய ஆய்வுக்குத் தேவையான தரவுகளை 26.2.2024 ஆம் தேதியன்றும் இணைய வழி மூலமாக அனைத்து துறை தலைவர்கள் மற்றும் துறை பொறுப்பாசிரியர்கள் உதவியுடன் மிகச் சிறப்பாக பதிவேற்றம் செய்யப்பட்டது.**

## 37. AISHE

**AISHE : 2023-24 -ஆம் கல்வியாண்டின் தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பு (NIRF) மற்றும் உயர்கல்விக்கான அகில இந்திய ஆய்வு (AISHE) பொறுப்பாசிரியராக கணினி அறிவியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் முனைவர் அ. சுப்பிரமணி பொறுப்பேற்று சிறப்பாக செயல்பட்டு வருகிறார். 2022-2023 -ஆம் ஆண்டிற்கான தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்புக்கு தேவையான இக் கல்லூரி தரவுகளை 16.12.2023 அன்றும், உயர்கல்விக்கான அகில இந்திய ஆய்வுக்குத் தேவையான தரவுகளை 26.2.2024 ஆம் தேதியன்றும் இணைய வழி மூலமாக அனைத்து துறை தலைவர்கள் மற்றும் துறை பொறுப்பாசிரியர்கள் உதவியுடன் மிகச் சிறப்பாக பதிவேற்றம் செய்யப்பட்டது.**

## 38.a. கல்விச் சுற்றுலா (Department of Economics)

பொருளாதாரத் துறை மாணவிகள் 103, பேராசிரியர்கள் 6 ஆகிய அனைவரும் 01.03.2024 அன்று ஒரு நாள் கல்லூரி கல்வி சுற்றுலாவிற்காக கன்னியாகுமரி மற்றும் அதனை சுற்றியுள்ள இடங்களை பார்வையிட்டனர். வரலாற்று சிறப்புமிக்க விவேகானந்தர் பாறை, திருவள்ளுவர் சிலை, மற்றும் காந்தி மண்டபம், வட்டகோட்டை தொட்டியம் ஆகியவற்றை பார்வையிட்டனர்.



## 38.b. கல்விச் சுற்றுலா (Department of Zoology)

2023-2024 ஆம் கல்வி ஆண்டில் 01.03.2024 மற்றும் 02.03.2024 ஆகிய தேதிகளில் விலங்கியல் துறை மாணவியர்கள் கல்வி சுற்றுலா பயணமாக கொச்சின், திருச்சூர் மற்றும் அதனை சுற்றியுள்ள இடங்கள் நீர்வீழ்ச்சி, அருங்காட்சியகம், வண்ண மீன்கள் வளர்க்கும் விதம், கொச்சின் துறைமுகம், செராய் கடற்கரை, திருச்சூர் வனவிலங்கு சரணாலயம் ஆகியவற்றை பார்வையிட்டு பயனடைந்தனர்.



## 38.c. கல்விச் சுற்றுலா (Department of Maths)

05.03.2023 அன்று கழுதத்துறை மாணவிகள் மற்றும் பேராசிரியர்கள் மொத்தம் 100 பேர் கன்னியாகுமரி மற்றும் அதனை சுற்றியுள்ள இடங்களுக்கு பாட சம்பந்தமான கல்வி சுற்றுலா சென்று வந்தனர்.



## 38.d. கல்விச் சுற்றுலா (Department of Commerce)

01.03.2024 அன்று வணிகவியல் துறை மூன்றாம் ஆண்டு இளநிலை வணிகவியல் இரு சுழற்சி மாணவியர் 106 பேர் மற்றும் பேராசிரியர்கள் ஏழு பேருடன் கல்வி சுற்றுலாவாக கொச்சின் சென்று சோட்டனிகரை, பகவதி அம்மன் கோவில், சில் பேலஸ் மியூசியம், துறைமுகம், ஆகிய இடங்களை பார்வையிட்டனர். கொச்சின் நகரத்தின் பாரம்பரியமிக்க இடங்கள் மற்றும் வணிக முறை பற்றி தெரிந்து கொண்டனர்.

## 38.c. கல்விச் சுற்றுலா (Department of Geography)

07.03.2024 அன்று புவியியல் துறை மாணவியர்கள் மற்றும் பேராசிரியர்கள் மொத்தம் 220 பேர் திருவனந்தபுரம் மற்றும் அதன் சுற்றியுள்ள இடங்களுக்கு பாடம் சம்பந்தமான கல்வி சுற்றுலா சென்று பயனடைந்தனர்.

# 39. விரிவுரை தொடர்கள்

வேதியல் துறை மற்றும் இயற்பியல் துறை சார்பாக இவ்வாண்டு விரிவுரை தொடர்கள் நடத்தப்பட்டது. இதன் முதற்கட்டமாக விரிவுரை தொடர் ஒன்றில் முனைவர் என் சோமநாதன் Deputy Director and Head Retired Polymer Science and Technology Lab, CLRI, Chennai, அவர்கள் Molecular Understanding Flexible Organic Optoelectronic என்ற தலைப்பில் 28.08.2023 அன்று சிறப்புரை ஆற்றினார். முதுநிலை அறிவியல் மாணவியர் இதில் பங்கேற்று பயன்பட்டனர்.



**இதன் இரண்டாம் கட்டமாக விரிவுரைத் தொடர் இரண்டில் முனைவர் டாக்டர் M சித்தார்த்த முத்து விஜயன் அவர்கள் Senior Scientist (CSIR - IPL), NAL Belur Campus delivered a special lecture on "Augmentation research basic sciences with AI& ML:Advantages a nd limitations" என்ற தலைப்பில் 1.9.2023 அன்று சிறப்புரை ஆற்றினார் மாணவியர் எதிர் பங்கேற்று பயன்பட்டனர்.**




LECTURE SERIES ORGANISED BY CHEMISTRY & PHYSICS

# 40. ஆசிரியர் தின விழா

செப்டம்பர் 5, 2024 அன்று நமது கல்லூரியில் ஆசிரியர் தின விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.




TEACHERS DAY CELEBRATION – SWEET DISTRIBUTION (05.0



TEACHERS DAY CELEBRATION – 05.09.2023

**Department of Economics**

# 40. ஆசிரியர் தின விழா

செப்டம்பர் 5, 2024 அன்று நமது கல்லூரியில் ஆசிரியர் தின விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.




**Department of History**

## 41. பொங்கல் விழா

12.01.2024 அன்று அனைத்து துறையைச் சார்ந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவிகள் தமிழர் திருநாளாம் தைப்பொங்கலை நமது கல்லூரியில் பொங்கல் வைத்து இனிப்புகள் வழங்கியும் ஆடல், பாடல், கும்மி, சிலம்பம் போன்ற நிகழ்ச்சிகள் நடத்தியும் கொண்டாடினார்கள்.



**Department of Economics**



**Department of History**

## 42. ஆசிரியர் பதவி உயர்வு

2023-2024 ஆம் கல்வியாண்டில் நமது கல்லூரியில் பல்வேறு துறைகளில் பணிபுரியும் 27 உதவி பேராசிரியர்கள் பணி மேம்பாட்டின் மூலம் இணை பேராசிரியராக பதவி உயர்வு பெற்றனர்.

## 43.a. ஐம்பெரும் விழா (நுண் கலை விழா)

18.03.2024 அன்று நமது கல்லூரியில் கவின் கலை விழா சிறப்பாக நடைபெற்றது.





Fine Art's Chief Guest

## 43.a. ஐம்பெரும் விழா (நுண் கலை விழா)

18.03.2024 அன்று நமது கல்லூரியில் கவின் கலை விழா சிறப்பாக நடைபெற்றது.



FINE ARTS - COOKING COMPETITION - 23.01.2024



FINE ARTS – ON STAGE EVENTS 31.01.2024



ON STAGE EVENTS- 31.01.2024

# 43.b. ஐம்பெரும் விழா (விளையாட்டு விழா)

19.03.2024 அன்று நமது கல்லூரியில் விளையாட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.







# 43.c. ஐம்பெரும் விழா (முத்தமிழ் விழா)

**20.03.2024 அன்று நமது கல்லூரியில் முத்தமிழ் விழா சிறப்பாக**





## 44. Research and Development Cell

**Research and Development Cell நம் கல்லூரியில் கல்வி சார் ஆராய்ச்சி மற்றும் ஆராய்ச்சி திட்டங்களை ஆசிரியர்களும் மாணவிகளும் திறம்பட பயன்படுத்த ஊக்குவித்து வருகிறது. ஆராய்ச்சி இதழ்களில் பிரசுரிக்க வழிகாட்டி வருகிறது.**

**UGC CARE LIST/ SCOPUS / WEB OF SCIENCE மற்றும் தரம் நிறைந்த ஆராய்ச்சி இதழ்களில் பிரசுரிக்க வழிகாட்டி வருகிறது.**

**2023 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைப்பாளராக முனைவர் K.M.சுமதி இணைப்பேராசிரியர் ஆங்கிலத்துறை அவர்களும், மற்றும் உறுப்பினர்களாக முனைவர் M.ராஜாராம் இணைப்பேராசிரியர் ஆங்கிலத்துறை, முனைவர் K.ராமசாமி கல்லூரி நூலகர், முனைவர் ராஜராஜேஸ்வரி இணைப்பேராசிரியர் B.B.A, மற்றும் முனைவர் A.சுப்பிரமணி உதவிப்பேராசிரியர் கணினி அறிவியல் துறை ஆகியோர் சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர்.**

நம் கல்லூரியில் வருடம் ஒருமுறை M.V.M Journal Of Research 8 ஆண்டுகளாக பிரசுரிக்கப்பட்டு வருகிறது. 2018 முதல் Online EDITION ஆகவும், M.V.M Journal Of Research கிடைக்கிறது.

இவ்வருடம்,

Editor. In Chief - Dr. K.M Sumathi, Associate Professor,
PG and Research Department of English.

Editor - Dr. B SathyaBama,
Associate Professor and Head Department of Zoology,

Editorial Board - Dr. Rajaram, Associate Professor of English
Dr.A. Subramani, Assistant Professor Computer Science,
and
Dr. K. RamaSamy College Librarian,

அவர்கள் திறம்பட செயல்பட்டு வருகின்றனர். இந்த Journal ஆனது பல்வேறுத்துறை சார்ந்த ஆராய்ச்சிக் கட்டுரையை பிரசுரிக்கிறது. முதன்முறையாக இவ்வருடம் முதல் Peer-Review அமல்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 20%ம் குறைவான Plagiarism கட்டுரைகள் மட்டுமே பிரசுரிக்கப்பட்டுள்ளது.

# Thank You To All